# இந்தியப் பொதுஉடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)

## தண்டகாரண்யச் சிறப்பு மண்டலக் குழு

<u>செய்தி அறிக்கை</u>

19 ஜூன் 2015

***மத்திய அரசு மூலம் செயல்படும் மூன்றாயிரம் பள்ளிகளையும்<br>உறைவிடப் பள்ளிகளைகளையும் மூடத் தொடங்கியுள்ளது<br>பொருளாதாரத் துறையிலும், கல்வித்துறையிலும் அரசின் கையாலாகத்தனத்தைக் காட்டுகிறது !<br>அரசின் மக்கள் விரோதப் பண்பை வெளிப்படுத்துகிறது !***

*சத்திஷ்கர் அரசாங்கம் மூன்றாயிரம் பள்ளிகளைகளையும், உறைவிடப் பள்ளிகளைகளையும் மூடும் நடவடிக்கையுடன் நடப்பு 2015-2016ஆம் ஆண்டு கல்வியாண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இந்த ஆண்டு சேர்க்கை இல்லை என்ற பெயரில் எல்லா உறைவிடப் பள்ளிகளையும் மூடத் தொடங்கியுள்ளது. இந்தப் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசியர்கள் அருகிலுள்ள வேறு பள்ளிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மூடப்பட்ட தொடக்கநிலை, இடைநிலை உறைவிடப் பள்ளிகளில் மிகப் பெரும்பாலானவை பழங்குடிகள் வசிக்கும் பகுதிகளில் இருப்பவை, குறிப்பாக பஸ்தார் வட்டாரத்தைச் சேர்ந்தவை. இது பா.ஜ.க. அரசாங்கத்தின் மக்கள் விரோத, பழங்குடி விரோதப் பண்பையும் வரலாற்றையும் மட்டுமல்ல, பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் அதன் கையாலாகத் தனத்தையும் காட்டுகிறது.*

*இத்தோடு, பன்னாட்டு நிதி நிறுவனம், உலக வங்கி முதலான ஏகாதிபத்திய நிதி அமைப்புகளின் வெட்கக்கேடான நிபந்தனைகளுக்கு உடன்பட்டு, மக்கள் நலத் திட்டங்களைத் தொடர வக்கற்று, மக்கள் விரோதக் கொள்கைகளை அரசாங்கம் மேற்கொள்கின்றது. கல்வி மென்மேலும் தனியார்மயம் ஆக்கப்படுகிறது. இது ஏழை பழங்குடிகளும் தலித்துகளும் பிற்பட்ட வகுப்புகளும் கல்வி கற்பதையும் வளர்ச்சி பெறுவதையும் தடுப்பதற்கு மறைமுகமான அடியெடுத்து வைத்தல் ஆகும்.*

*மேம்பாட்டுப் பணிகள், ஆசிரியர் நியமனம் முதலானவற்றின் மீதான செலவீனத்தைக் குறைத்தல் என்ற பெயரில், மிக நீண்ட காலமாக மூன்றாம், நான்காம் நிலை அரசு ஊழியர்கள் செயலற்ற நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர். சிக்ஷு கர்மி திட்டத்தின் வழியான நியாமனம் என்ற பெயரில் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் தினக் கூலியாக, நிரந்தமற்றப் பணியாளர்களாக மிகக் குறைந்த சம்பளத்தில் தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகின்றனர். இப்போது இந்த மாநிலத்தில் ஆயிரக் கணக்கான உறைவிடப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. போதுமான பள்ளிகள், ஆசிரியர்கள் இல்லாமையால் எண்ணற்ற சிக்கல்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் பழங்குடிப் பகுதிகளில், இப்போது சிறார் கல்வி முற்றிலும் ஒழிக்கப்பட்டு, கல்லாமை அரங்கேற்றப்பட்டுள்ளது. பத்து ஆயிரக்கணக்கான ஆசிரியப் பணி காலியிடங்கள் நியமனம் நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய பழங்குடிப் பகுதிகளில் வேலைவாய்ப்புகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு, வேலையற்றவர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். வெட்ககரமான நிதி நிலைமையால் மத்திய அரசாங்கம் நூலகம், ஆய்வகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தங்கள், மதிய உணவு, புதிய ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தல், அவர்களுக்குச் சம்பளம் கொடுத்தல், இன்னும் பிற வசதிகள் முதலான, வழங்க வேண்டிய உள்கட்டமைப்பு வசதிகளின் வளர்ச்சியை வெட்டியுள்ளது. `பச்சோ, பதோ-லிஹோ, ஆகே படோ (சிறுவர்களே படிப்பதிலும் எழுதுவதிலும் முன்னேறுக)` என்று தொலைகாட்சியிலும் வானொலியிலும் தொடர்ச்சியாகச் செய்யப்படும் போலி பிராச்சாரத்தின் உண்மையான நோக்கம், மாவோயிஸ்ட்கள் பழங்குடியினர் கல்விக்கு எதிரானவர்கள் என்று மக்களுக்குக் காட்டுவதற்கு ஆகும். தங்கள் சொந்தக் கிராமத்தில் பள்ளிகள் இருந்தாலும்கூட, சிறுவர்கள், குறிப்பாகச் சிறுமிகள் பள்ளி செல்லும் வாய்ப்புகளற்று உள்ளனர். தொலைவில்*

இருக்கும் பள்ளிக்குச் செல்லுவதற்கு எண்ணற்ற இடையுறுகள் ஏற்படுகின்றன. குடும்பத்தினர் சிறார்களையும் சிறுமிகளையும் தாங்கள் கஷ்டப்பட்டு மேற்கொள்ளும் வேளாண்மையில் உழைக்கவும், உள்ளூரில் வேலைக்குச் செல்லவும் வற்புறுத்துகின்றனர் என்ற மறுக்கவியலாத சூழல் அவர்களைச் சூழ்ந்துள்ளது. இதைவிட நல்ல நிலைமையில் உள்ள சில குடும்பத்தினர் தங்கள் சிறுவர்களைப் படிக்கவைக்கின்றனர். ஆனால் சேர்க்கை இல்லை என்ற பெயரில் அரசாங்கம் பள்ளிகளை மூடிக்கொண்டு உள்ளது. இது ஒடுக்கப்பட்ட பின்தங்கிய மக்கள் பிரிவினரின் கல்வி குறித்து மிக மோசமான அக்கறையற்ற, சதித்தனமான அரசாங்கத்தின் பார்வையல்லாமல் வேறொன்றுமில்லை. இது இருளில் மூழ்கியுள்ள பழங்குடிப் பெண்களின் கல்வியை, பெண் கல்வியை மேலும் பாதிக்கிறது. ` பேட்டி பச்சோ, பேட்டி பதௌ ` (பெண்களைப் பாதுகாப்போம், பெண்களுக்குக் கல்வி அளிப்போம்) என்ற தொடர்ச்சியான நரந்திரமோடியின் முழக்கம் மக்களின் காதுகளில் தெளிவாக விழுகிறது. இந்த வகையான முழக்கங்கள் எல்லாம் மக்களை ஏமாற்று வதற்கும் திசைத்திருப்புவதற்கும் ஆகும். ஒருபுறம் ஆயிரக் கணக்கான உறைவிடப் பள்ளிகளை மூடிவிட்டு, மறுபுறம் இந்தக் கல்வியாண்டில் ஆறரை இலட்சம் சிறுவர் உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர் என்று சத்திஷ்கர் கல்வி அமைச்சர் கெடார் கஷ்யாப் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு நகைப்புக்கு உரியது மட்டுமல்ல, ஏமாற்றுச் செயலும் ஆகும். பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள், பழங்குடிகள், குறிப்பாகப் பெண்கள் என எல்லா மக்கள் பிரிவினரும் கல்வி கற்பதிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். இது அரசின் மக்கள் விரோத, பழங்குடி விரோத, வளர்ச்சி விரோதப் போக்கை நிரூப்பிக்கிறது.

ராமன் சிங் அரசாங்கம் தலித், பழங்குடிகள் முதலான பின்தங்கிய மக்களைக் கல்வி கற்பதிலிருந்து வெளியேற்றுதல், அது வளர்ச்சிக்கு எதிராக உள்ளது என்பதற்கு ஒரு சான்று ஆகும். ராமன் சிங் அரசாங்கத்தின் வளர்ச்சி என்பதன் பொருள் உள்நாட்டு, வெளிநாட்டுக் கார்பரேட்களுக்கு மக்களின் நிலம், நீர், காட்டு வளங்களை வழங்குவதும், அதன் மூலம் கார்பரேட்டுகள் குபேரச் செல்வத்தை அடைவதுமே ஆகும். இந்த வளர்ச்சியின் உண்மையான பொருள் ஏழை, பிற்படுத்தப்பட்ட, தலித், பழங்குடி மக்களுக்குக் குடிக்கும் தண்ணீர், உணவு, உடை, குடியிருப்பு, உடல்நலம் முதலானவற்றை முற்றிலும் இல்லாமல் ஆக்குவது ஆகும். பழங்குடிகள் கல்வி கற்று, அறிவு பெற்று, அவர்களின் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்து இன்னும் வலிமையாகக் குரலெழுப்பி, தங்கள் உண்மையான வளர்ச்சிக்கும், சுய ஆட்சிக்குமான ஆயுதப் போராட்டத்தில் இணைந்துவிட்டால் என்ன செய்வது என்று ராமன் சிங் அச்சமடைந்துள்ளார்.

பஸ்தார் வட்டாரத்தில் உள்ள பல பள்ளிக் கூடங்கள் இப்போது காவல் படை, துணை இராணுவப் படை ஆகியவற்றின் தங்குமிடங்களாக மாற்றப்பட்டுள்ளன. நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்த நிலையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ள போதிலும், இன்னும் படைகள் அங்கேயே தங்கியுள்ளன. மற்றொரு பக்கம், அரசாங்கத்தின் ஆயுதப் படைகளின் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கும் எமது கட்சித் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஜன்தன் சர்க்கார் (மக்கள் அரசு) பள்ளிகளை நடத்தி வருகின்றது. நாராயணப்பூர், கன்கேர், பஸ்தார், பீஜப்பூர், தண்டேவாடா, சுக்மா  ஆகிய மாவட்டங்களில் மக்கள் அரசு நடத்தி வரும் டஜன் கணக்கான பள்ளிகளின் மீது தக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நோட்டுப் புத்தங்கள், பாடப் புத்தகங்கள், உடைகள், இன்னும் வேறு சில மதிப்புவாய்ந்த பொருள்கள் எரிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் பழங்குடிகளின் கல்வி பற்றி இராமன் சிங் அரசாங்கத்திற்கு உள்ள அக்கறையின் போலித்தன்மையைத் தெளிவாகக் காட்டுகிறது.

உறைவிடப் பள்ளிகள் மூடும் முடிவைத் திரும்பெறக் கோரும்படியும், இப்பள்ளிகளைத் தொடர்ச்சியாக நடத்தக் கோரும்படியும், சத்திஷ்கர் அரசாங்கத்தில் கல்விக்கு எதிரான கொள்கைக்கு வலிமையான எதிர்ப்பைக் காட்டுமாறும் எல்லா மாணவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், மாணவர்களின் உறவினர்களையும், முற்போக்கான, ஜனநாயக அறிவாளி களையும், மனித உரிமை அமைப்புகளையும், பழங்குடிச் சமூக அமைப்புகளையும், பிற சமூக அமைப்புகளையும் எமது கட்சி அறைகூவி அழைக்கிறது. பாதிக்கப்பட்ட கிராமங்களின் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் உறைவிடப் பள்ளிகளை, அவை இருந்த இடங்களில் தொடர்ந்து நடத்த முன்வருமாறு அறைகூவி அழைக்கின்றோம்.

Gudsa Usendi

ஹுட்ச உசேந்தி,
செய்தித் தொடர்பாளர்,
தண்டகாரண்யச் சிறப்பு மண்டலக் குழு,
இபொக (மாவோயிஸ்ட்).